**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8109456

1. District மாவட்டம் : **கடலூர்** PS காவல்நிலையம் : **ஊ.த.க. பிரிவு** Year ஆண்டு : **2023** FIR No. மு.த.அ. எண் : **4/2023** Date நாள் : **16.03.2023**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption (Amendment) Act 2018** Sections பிரிவுகள்: **7**
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : நாள் முதல் **15.03.2023** Date to : நாள் வரை **15.03.2023**
   Time Period : நேர அளவு
   Time from : நேரம் முதல் **15.10 hrs** Time to : நேரம் வரை **23.00 hrs**
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **16.03.2023** Time : நேரம் **1100 hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **1100 hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **கணினி தட்டச்சு**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் **சுமார் 2 கி.மீ. தென்கிழக்கு**
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி **கடலூர் மாநகராட்சி அலுவலகம்**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **சி. கீதா**
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் **இந்தியன்**
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் ----
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் ----
   (f) Occupation : தொழில் **மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொ),**
   (g) Address : முகவரி **தனித்துணை ஆட்சியர் (முத்திரை தாள்), கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள்**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   **1. கடலூர் மாநகராட்சி அலுவலக ஊழியர்கள்**
   **2. T. சாரதாம்பாள், க/பெ. ஆறுமுகம், உரிமையாளர், பங்கஜம் பிளானர்ஸ், கடலூர்.**
   **3. ஆறுமுகம், உரிமையாளர், பங்கஜம் பிளானர்ஸ், கடலூர்.**
   **4. சு. முருகமணி, த/பெ ராஜி, உரிமையாளர், Alpha Construction, கடலூர்.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u>

இன்று 16.03.2023 ஆம் தேதி காலை 11.00 மணிக்கு கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் பணியில் இருந்தபோது, சி.கீதா, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொ), தனித்துணை ஆட்சியர் (முத்திரை தாள்), கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள் என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று கீழ்க்கண்டவாறு வழக்கு பதிவு செய்யப்பட்டது. புகாரின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர் சி.கீதா, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொ), தனித்துணை ஆட்சியர் (முத்திரை தாள்), கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள், பெறுநர் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கடலூர். ந.க. எண். A/176/2023 நாள் : 16.03.2023

(தொடர்ச்சி பக்கம்–3)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு
[signature] 16.3.23

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 16/3/23

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
16.03.2023 - 14.00 hrs.

Name: பெயர் ...[signature]...
Rank: நிலை ...ADSP.......No. எண் .........
VSAC, Ctym.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

அய்யா, பொருள் : திடீர் ஆய்வு சோதனை – கடலூர் மாநகராட்சி அலுவலகம் – கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் ரொக்கப்பணம் ஒப்படைப்பு – நடவடிக்கை வேண்டி புகார் மனு சமர்ப்பித்தல் – சம்மந்தமாக, கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட தனித்துணை ஆட்சியர், முத்திரைத்தாள் (பொறுப்பு) ஆய்வுக்குழு அலுவலர் சி.கீதா ஆகிய நான் 15.03.2023 ஆம் தேதி எனது அலுவலகத்தில் இருக்கும் போது எனக்கு கிடைத்த தகவலின் படி கடலூர் மாநகராட்சி அலுவலகத்தில் இயங்கும் நகரமைப்பு பிரிவு, பிறப்பு இறப்பு பிரிவு அலுவலகம், பொது சுகாதாரப் பிரிவு, நகர நில அளவை பிரிவு, மாநகராட்சி ஆணையர் அலுவலகங்களில் பொது மக்களிடம் வேலையை முடித்து கொடுப்பதற்காக லஞ்சமாக பணம் பெறுவதாக கிடைத்த ரகசிய தகவலை பெற்று, உடனடியாக நான் புறப்பட்டு எங்களது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அருகே இருக்கும் கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு பகல் சுமார் 2.00 மணிக்கு வந்து அங்கு பணியில் இருந்த கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ந.தேவநாதன் அவர்களிடம் எனக்கு கிடைத்த ரகசிய தகவலை தெரிவித்தும், மேலும் எனது தலைமையில் மேற்படி கடலூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு மாலை சுமார் 3.00 மணிக்கு மேல் சென்று திடீர் ஆய்வு செய்தால் அங்கு பணிபுரியும் அலுவலர்களிடமிருந்து லஞ்சப்பணத்தை கைப்பற்றலாம் என நான் கூறியதன் அடிப்படையில், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்த காவல் குழுவினருடன் ஆலோசனை செய்தார். பின்னர் நானும், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு. ந.தேவநாதன் மற்றும் அவரது அலுவலகத்தில் பணிபுரியும் பெண் காவலர் உள்ளிட்ட காவல் குழுவினர்களும் மாலை சுமார் 2.50 மணிக்கு இரண்டு அரசு வாகனங்களில் புறப்பட்டு கடலூர் பாரதி சாலையில் கிழக்கு திசையில் அமைந்துள்ள கடலூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு சுமார் மாலை 3.00 மணிக்கு சற்று வெளியே மறைவாக வாகனங்களை நிறுத்தினோம். சிறிது நேரம் எங்களது குழுவினர் அனைவரும் கடலூர் மாநகராட்சி அலுவலகத்தை கண்காணித்து பின்னர் மாலை சுமார் 3.10 மணிக்கு கடலூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு தென்மேற்கு திசையில் உள்ள இரும்பு கிரில் கேட்டின் உள்ளே சென்றோம். அலுவலக வளாகத்தில் வடக்கு திசை பார்த்தவாறு மாநகராட்சி ஆணையர் அலுவலகம் உள்ளது. அதன் பிரதான

வாயிற்படியின் உள்ளே சென்றவுடன் வலது புறம் பொதுப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. அந்த பிரிவிற்கு உள்ளே சென்றவுடன் ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த நபரிடம் என்னையும், காவல் குழுவினரையும் அடையாள அட்டையை காண்பித்து அறிமுகம் செய்து வைத்தேன். பின்னர் அந்நபரை பற்றி விசாரிக்க அவர், தனது பெயர் M.K.முனுசாமி, கணக்காளர் என்று கூறினார். பின்னர் நான் அவரிடம் அலுவலகத்தை ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்தேன். மேலும் சோதனையை துவக்குவதற்கு முன்னர், குழுவில் இடம் பெற்றிருந்த அனைவரும் அவரது முன்னிலையில் சுய சோதனை செய்து குழுவினரிடம் பொருளோ, பணமோ இல்லை என்பதை உறுதி செய்து கொண்டோம். வெளி அலுவலில் இருந்த கடலூர் மாநகராட்சி ஆணையரை அலுவலகம் வருமாறு தகவல் தெரிவிக்கப்பட்டது. பின்னர் நான் மேற்படி அலுவலகத்தை, M.K.முனுசாமி அவர்கள் முன்னிலையிலேயே ஆய்வு செய்ய போகும் விவரத்தை தெரிவித்து, பின்னர் நான், M.K.முனுசாமி, கணக்காளர் மற்றும் காவல் குழுவினருடன் அந்த பொது பிரிவு மற்றும் அங்கு பணியில் இருந்த அலுவலர்களிடம் சோதனை செய்யப்பட்டது. அப்போது அங்கு பணியில் இருந்த சுகாதார ஆய்வாளர் A.கிருஷ்ணராஜ் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1,300/– இருந்தது, பணியமைப்பு உதவியாளர் N.நூர்அலி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.110/– இருந்தது. சத்துணவு உதவியாளர் R.ரம்யா என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.220/– இருந்தது. அலுவலக உதவியாளர் S.ராஜேஸ்வரி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.550/– இருந்தது. கணக்கர் M.K.முனுசாமி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.370/– இருந்தது. கணக்கு உதவியாளர் A.உமா என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.200/– இருந்தது. சி4 தணிக்கை உதவியாளர் P.லலித்தாம்பிகை என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2850/– இருந்தது. மேலும் அந்த பொதுப் பிரிவில் இருந்த பாதாள சாக்கடை திட்ட ஒப்பந்தகாரர் R.ரவிச்சந்திரன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.600/– இருந்தது. அதே பிரிவில் பள்ளிக் கல்வி ஸ்மார்ட் கிளாஸ் ரூம் ஒப்பந்ததாரர் G.மாதவன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.9,400/– இருந்தது. அவரவர் வைத்திருந்த பணம் பற்றி விசாரித்ததில் உரிய முகாந்திரன் கூறியதால் அவர்களிடம் பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி

அறையை சோதனை செய்ததில் கணக்கில் வராத பணமோ அல்லது பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேற்படி அறைக்கு எதிரே உள்ள வருவாய் பிரிவு சோதனை செய்யப்பட்டது. வருவாய் ஆய்வாளர் M.பாஸ்கர் என்பவரையும் மற்றொரு வருவாய் ஆய்வாளர் R.அசோகன் என்பவரையும் சோதனை செய்யததில் அவர்களிடம் பணம் எதுவும் இல்லை. உதவியாளர், K.ரகமத்துள்ளா என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.600/– இருந்தது. மேயரின் நேர்முக உதவியாளர் ரகோத்தமன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1000/– இருந்தது. அவரவர் வைத்திருந்த பணம் பற்றி விசாரித்ததில் உரிய முகாந்திரன் கூறியதால் அவர்களிடம் பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையை சோதனை செய்ததில் கணக்கில் வராத பணமோ அல்லது பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. கீழ் தளத்தில் வராண்டாவில் இருந்த தொழில்நுட்ப உதவியாளர் சத்தியராஜ் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.800/– இருந்தது. மேலும், பொது நபர் வெற்றிவேல் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.200/– இருந்தது. அவரவர் வைத்திருந்த பணம் பற்றி விசாரித்ததில் உரிய முகாந்திரன் கூறியதால் அவர்களிடம் பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறைக்கு மேற்கில் உள்ள மாநகராட்சி ஆணையர் அறை சோதனை செய்யப்பட்டது. அப்போது அழைப்பின் பேரில் ஆணையர் திரு. வே. நவேந்திரன் என்பவர் அலுவலகம் ஆஜரானார். அவரது அறையை சோதனை செய்ததில் அங்கு கணக்கில் வராத பணமோ அல்லது பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேற்படி அறைக்கு எதிரில் உள்ள காத்திருப்பு அறையை சோதனை செய்ததில் அங்கு அலுவலக உதவியாளர் M.அருன்ராஜ் என்பவர் இருந்தார். அவரை சோதனை செய்ததில அவரிடம் ரூ.5,500/– இருந்தது. மேலும் அந்த அறையில் வீட்டு வரி கட்ட வந்ததாக கூறிய K.முருகன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.420/– இருந்தது. அவரவர் வைத்திருந்த பணம் பற்றி விசாரித்ததில் உரிய முகாந்திரன் கூறியதால் அவர்களிடம் பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி அறையை சோதனை செய்ததில் கணக்கில் வராத பணமோ அல்லது பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. முதல் தளத்தில் இயங்கும் நகர சார் ஆய்வாளர் அலுவலகம் சோதனை செய்யப்பட்டது. நகர சார் ஆய்வாளர் S.குருமூர்த்தி என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும்

இல்லை. மேற்படி அறையை சோதனை செய்ததில் கணக்கில் வராத பணமோ அல்லது பொருளோ எதுவும் கைப்பற்றப்படவில்லை. முதல் தளத்தில் இயங்கிவந்த நகரமைப்பு பிரிவு சோதனை செய்யப்பட்டது. நகரமைப்பு பிரிவில் பணிபுரிந்த D.அன்பரசி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.2000/– இருந்தது. நகரமைப்பு அலுவலர் S. முரளி என்பவரை சோதனை செய்ய அவரிடம் ரூ.1200/– இருந்தது. நகரமைப்பு ஆய்வாளர் G.அருள்செல்வன் என்பவரை சோதனை செய்ய அவரிடம் பணம் எதுவும் இல்லை. மேலும், கடலூர் மாநகராட்சி நிர்வாகம் மற்றும் இடைத்தரகர்கள் பற்றி இரகசிய விசாரணை செய்ததில் கடலூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு எதிர்புறம் அமைந்துள்ள Fund Office Buildingல் முதல் தளத்தில் இயங்கிவரும் Alpha construction அலுவலகத்தின் உரிமையாளர் R.முருகமணி என்பவரும், புதுப்பாளையம் சஞ்சீராயன் கோயில் தெருவில் உள்ள பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் ஆறுமுகம் மனைவி T. சாரதாம்பாள் என்பவரும் நகராட்சி அதிகாரிகளுக்கு இடைத்தரகர்களாகவும், மாநகராட்சியின் பதிவேடுகள் மற்றும் கோப்புகள் மேற்படி தனியார் அலுவலகங்களில் உள்ளது என்றும், மேற்படி ஆவணங்களை பயன்படுத்தி மாநகராட்சிக்கு இணையான அலுவலமாக செயல்படு வருவதாக தெரியவந்தது. மேலும், மாநகராட்சிக்கு கட்டிட அனுமதி, செத்துவரி நிர்ணயம் போன்றவற்றிகாக விண்ணப்பிக்கும் பொதுமக்களை மாநகராட்சி அலுவலர்கள் மேற்படி Alpha construction உரிமையாளர் முருகமணியிடமும் பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் ஆறுமுகத்திடமும் அனுப்பிவைத்து விடுவதாகவும், மேற்படி நபர்கள் பொதுமக்களிடம் மாநகராட்சி அதிகாரி மற்றும் அலுவலர்களுக்கு லஞ்சம் கொடுக்கவேண்டும் என்று சொல்லி பொதுமக்களிடம் அதிக பணம் வசூல் செய்வதாகவும் தெரியவந்தது. மேற்படி ரகசிய தகவலின் அடிப்படையில் நான், கூடுதல் கண்காாணப்பாளர் மற்றும் காவல் குழுவினருடன் Alpha construction அலுவலகத்திற்கு மாலை சுமார் 4.10 மணிக்கு சென்று அலுவலகத்தை சோதனை செய்ய உரிமையாளர் R.முருகமணி என்பவரிடம் என்னையும், ஆய்வு குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து சோதனை செய்யும் விவரத்தை கூறி அவரிடம் அனுமதி பெற்று சுயபரிசோதனை செய்து காண்பித்து பின்னர், சோதனை ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தை சோதனை செய்ததில்

அந்த நிறுவனத்தில் Designer ஆக வேலை செய்யும் திருமதி.லட்சுமி என்பவரின் கைப்பையில் இருந்த ரூ.3,90,000/– இருந்தது, இதுகுறித்து அவரிடம் விசாரணை செய்யப்பட்டது. அதில் ரூ.1,40,000/– பணம் கடலூரில் செந்தில் பேப்பர் ஸ்டோர் நடத்தி வரும் திரு.செந்தில்நாதன் என்பவர் கடை கட்டிடுவதற்கு அனுமதி பெற கட்டணம் கட்டுவதற்காக கொடுத்ததாகவும், மேலும், ரூ.1,00,000/– பணம் குள்ளஞ்சாவடியில் ஆனந்தம் கல்லூரி கட்டுவதற்கு கட்டிட வரைப்படம் தயார் செய்வதற்காக அதன் உரிமையாளரால் கொடுக்கப்பட்டதாகவும், ரூ.1,20,000/– மேற்படி நிறுவனம் ஒப்பந்த அடிப்படையில் கட்டி வரும் கட்டிடத்திற்கு உரிமையாளரால் கொடுக்கப்பட்டிருந்த தொகை என்றும், மேலும் ரூ.30,000/– அங்கு Designer ஆக வேலை செய்யும் லட்சுமி என்பவரின் சம்பள பணம் என்றும் கூறியதன் அடிப்படையில் மேற்படி பணம் ரூ.3,90,000/– த்தை திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அங்கு மேஜையின் டிராயரில் ரூ.5,00,000/– பணம் இருந்தது. அப்பணம் குறித்து சரியான முகாந்திரம் கூறவில்லை. மேலும் அவர் விசாரணையில் அந்த பணம் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, கிராம ஊராட்சிகளில் கட்டிடம் மற்றும் மனை பிரிவிற்கு அனுமதி பெற அலுவலர்களுக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த கமிஷன் பணம் என்று தெரிவித்தார். ஆகவே, மேற்படி பணம் ரூ.5,00,000/– விசாரணைக்காக கடலூர் மாநகராட்சி அலுவலகம் கொண்டுவரப்பட்டது. பின்னர், மாலை சுமார் 4.30 மணிக்கு நான் ஆய்வுக்கு குழுவினருடன் கடலூர் புதுப்பாளையம், சஞ்சீவிராயன் கோயில் தெருவில் இயங்கும் பங்கஜம் பிளானர்ஸ் அலுவலகம் சென்று அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் இளக்கியா, சுகந்தி, கௌசல்யா மற்றும் பைசல் ஆகியோளிடம் என்னையும், ஆய்வு குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து சோதனை செய்யும் விவரத்தை கூறி அவரிடம் அனுமதி பெற்று சுயபரிசோதனை செய்து காண்பித்த பின்னர், சோதனை ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தின் மேஜை மீது இருந்த (1) திருப்பாபுலியூர் வார்டு 5, (2) புதுப்பாளையம் வார்டு 6, (3) கடலூர் டவுன் வார்டு 3, (4) மஞ்சக்குப்பம் வார்டு 7, (5) கோண்டூர், (6) செஞ்சிகுமாரபுரம், குமாரபேட்டை, (7) தோட்டப்பட்டு, (8) சின்னகங்கணாங்குப்பம், பெரிய கங்கணாங்குப்பம், (9) திருவந்திபுரம், (10) நத்தப்பட்டு, (11) காராமணிக்குப்பம், (12) பாதிரிகுப்பம், (13) பச்சாங்குப்பம், (14) வெளிச்செம்மண்டலம்,

உச்சிமேடு, (15) கூத்தப்பாக்கம் ஆகிய பகுதி மற்றும் கிராமங்களின் கிராம கணக்கின் வரைபடம் (FMB) ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அலுவலகத்தில் இருந்த கணிப்பொறியை ஆய்வு செய்ததில் pangajamplanners@ymail.com என தெரியவந்தது. அலுவலக ஊழியர்கள் உதவியுடன் மேற்படி mail id ஐ ஆய்வு செய்ததில் கடலூர் மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர் அருள்செல்வன் என்பவர் அவரது mail id guruarul7671@gmail.com என்ற mail id யில் இருந்து அலுவலக கோப்புகளை பணம் பெரும் நோக்கில் பங்கஜம் பிளானர்ஸ் mail id க்கு அனுப்பப்பட்டிருந்தது தெரியவந்தது. மேற்கண்ட mail id களுக்கு இடையிலான தொடர்புகளை screen shot செய்து பிரதி எடுக்கப்பட்டது. மேற்படி FMB பதிவேடுகள் மற்றும் பிரதிகள் ஆகியவற்றை பரிசீலினை செய்வேண்டி கடலூர் மாநகராட்சி அலுவலகம் கொண்டுவரப்பட்டது. பின்னர் கடலூர், கோண்டூர், தமிழ் முத்து நகரில் இயங்கிவரும் பங்கஜம் பிளானர்ஸ் என்ற பெயரில் மற்றொரு அலுவலகத்திற்கு மாலை சுமார் 5.00 மணிக்கு சென்றபோது, அங்கு அலுவலகத்தில் இருந்த உரிமையாளர் T.சாரதாம்பாள் என்பவரிடம் என்னையும், ஆய்வு குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து சோதனை செய்யும் விவரத்தை கூறி அவரிடம் அனுமதி பெற்று சுயபரிசோதனை செய்து காண்பித்த பின்னர், சோதனை ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் மேஜை மீது இருந்த 1) உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவலக ந.க.எண்.1558/2022/கமா நாள் 19.12.2022 ன்படி நகர ஊரமைப்பு இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிய அசல் கடிதம், 2) வேளாண்மை இனை இயக்குநர், கடலூர் அலுவலக கடித எண். ஈ2/16064/2022 நாள் 22.11.2022 ன்படி உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு, கடலூர் அசல் கடிதம், 3) வேளாண்மை இனை இயக்குநர், கடலூர் அலுவலக கடித எண். ஈ2/11607/2022 நாள் 17.08.2022 ன்படி உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு, கடலூர் அசல் கடிதம், 4) வேளாண்மை இனை இயக்குநர், கடலூர் அலுவலக கடித எண். ஈ2/17527/2022 நாள் 14.12.2022 ன்படி உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு, கடலூர் அசல் கடிதம், 5) வேளாண்மை இனை இயக்குநர், கடலூர் அலுவலக கடித எண். ஈ2/17526/2022 நாள் 14.12.2022 ன்படி உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு, கடலூர் அசல் கடிதம், 6) வேளாண்மை இனை இயக்குநர், கடலூர்

அலுவலக கடித எண். ஈ2/17398/2022 நாள் 12.12.2022 ன்படி உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு, கடலூர் அசல் கடிதம், 7) உதவி இயக்குநர், மாவட்ட நகர ஊரமைப்பு அலுவக ந.க.எண்.320/2022/கமா நாள் 10.10.2022 ன்படி ஆணையர், கடலூர் மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பிய அசல் கடிதம் ஆகியவை கண்டுபிடிக்கப்பட்டு பரிசீலனை செய்யவேண்டி கடலூர் மாநகராட்சி கொண்டுவரப்பட்டது. மேலும் நான் அழைத்ததின் பேரில் கடலூர் மாநகராட்சி அலுவலகத்திற்கு ஆஜரான Alpha construction உரிமையாளர் R.முருகமணி மற்றும் பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் T.சாரதாம்பாள் ஆகியோர்களை விசாரித்து அவர்களிடம் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டு கையொப்பம் பெறப்பட்டது. மேலும் எனது விசாரணையில் மேற்படி பணம் ரூ.5,00,000/– மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, கிராம ஊராட்சிகளில் கட்டிடம் மற்றும் மனை பிரிவிற்கு அனுமதி பெற அலுவலர்களுக்கு கொடுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த கமிஷன் பணம் என்று தெரியவந்தது, ஆகவே, மேற்படி பணம் ரூ.5,00,000/– விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து பங்கஜம் பிளானர்ஸ் அலுவலகங்களில் கண்டுபிடிக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்ததில் குற்றச்சாட்டில் சம்மந்தப்பட்ட ஆவணங்களாக தெரியவந்தது. எனது விசாரணையில் கண்டுபிடிக்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் தனி நபர்களிடம் இருப்பதற்கான சரியான முகாந்திரம் இல்லை, ஆகவே, அந்த ஆவணங்களை விசாரணைக்காக கைப்பற்றினேன். இந்த நிகழ்வுகள் தொடர்பாக திடீர் ஆய்வு மகஜர் மாலை 3.10 மணி முதல் இரவு 11.00 மணிக்கு தயார் செய்யப்பட்டது. 15.03.2023 ஆம் தேதி எனது தலைமையிலான திடீர் ஆய்வின்போது கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.5,00,000/–, ஆவணங்கள், கோப்புகள் மற்றும் பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் திருமதி.சாரதாம்பாள் மற்றும் அவரது கணவர் ஆறுமுகம், ஆல்பா பில்டில் கன்ஸ்ரட்ஷன் உரிமையாளர் திரு.முருகமணி ஆகியோரது வாக்குமூலங்களில் இருந்தும் கடலூர் மாநகராட்சி அலுவலர்களுக்கும் மேற்கண்ட நபர்களுக்கும் இடையே கட்டிடம் மற்றும் மனை பிரிவிற்கு அனுமதி வழங்குதல் போன்ற அரசு பணிகளுக்காக லஞ்சப்பண பரிவர்த்தனை நடைபெற்று வருவது உறுதியாக தெரிய வருகிறது. மேலும் பங்கஜம் பிளானர்ஸ் மற்றும் ஆல்பா பில்டில் கன்ஸ்ரட்ஷன்

ஆகியோர்கள் கடலூர் மாநகராட்சிக்கு இணையான அலுவலகமாக செயல்பட்டு வருவதும் தெரிய வருகிறது. மேலும் மேற்கண்ட பிளானர்ஸ் உரிமையாளர்களிடம் லஞ்சப்பண பரிவர்த்தனையில் ஈடுபட்ட கடலூர் மாநகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களை கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டி, கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத பணம் ரூ.5,00,000/–, ஆவணங்கள், கோப்புகள், தயார் செய்யப்பட்ட அசல் கைப்பற்றுதல் மகஜர் மற்றும் பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் திருமதி.சாரதாம்பாள், ஆல்பா பில்டில் கன்ஸ்ரட்ஷன் உரிமையாளர் திரு.முருகமணி ஆகியோரது வாக்குமூலங்கள் ஆகியவற்றுடன் இன்று 16.03.2023 ந்தேதி காலை 11.00 மணிக்கு, கடலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி புகார் மனுவை தயார் செய்து தங்களிடம் கொடுக்கிறேன். எனவே கடலூர் மாநகராட்சி அலுவலக ஊழியர்கள், பங்கஜம் பிளானர்ஸ் உரிமையாளர் திருமதி.சாரதாம்பாள் மற்றும் அவரது கணவர் ஆறுமுகம், ஆல்பா பில்டில் கன்ஸ்ரட்ஷன் உரிமையாளர் திரு.முருகமணி ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (சி.கீதா) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் (பொ), தனித்துணை ஆட்சியர் (முத்திரை தாள்), கடலூர், விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்கள். இப்படிக்கு, (ஒப்பம் xxxx) 16.03.23.

Sir,

Received the above complaint on 16.03.2023 at about 11.00 hrs., Hence, I registered a case in Cuddalore Vigilance and Anti-Corruption in Cr.No.04/2023, U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 16.03.2023 at 12.00 hrs., sd/-xxxxx 16.03.2023 (N.DEVANATHAN), Addl. Superintendent of Police, V & AC, Cuddalore.

ந. தேவநாதன் 16/3/23

Additional Superintendent of Police
Vigilance and Anti-Corruption
Cuddalore.